தினமலர்
உண்மையின் உரைகல்

<u>தக்காளி விலை சரிவுஉச்சத்தில் பீன்ஸ் விலை :</u>

ஈரோடு: வடமாநிலத்தில் யுகாதி விழா நிறைவு பெற்றதால், ஆந்திரா மற்றும் கர்நாடகா மாநிலத்தில் இ ருந்து தக்காளி வரத்து அதிகரித்தது. இதனால், தக்காளி விலை குறைந்து வருகிறது. ஆனால், பீன்ஸ் விலை உச்சத்துக்கு சென்றன.

ஆந்திரா மற்றும் கர்நாடகா பகுதியில் இருந்து தமிழகத்துக்கு அதிகளவில் தக்காளி கொள்முதல் செய்யப்படுகிறது. உள்ளூரில் உற்பத்தியாகும் தக்காளி, திருமணம், கோவில் நிகழ்ச்சி போன்ற, பிற தேவைகளுக்கு பயன்படுத்தப்பட்டாலும், தேவையை பூர்த்தி செய்யும் அளவுக்கு, பிற மாநிலங்களை நம்பி இருக்க வேண்டியுள்ளது. கடந்த வாரம் யுகாதி விழா நடந்தது. இவ்விழா, வடமாநிலங்களில் வெகு விமர்சையாக கொண்டாடுவதால், தொழிலாளர்கள் தட்டுப்பாடு ஏற்படுவது வழக்கம். ஆகவே, தக்காளி வரத்து குறைந்து விட்டன. இதனால், தக்காளி விலை, கடந்த வாரம் கிலோ ஒன்றுக்கு, 25 ரூபாய் வரை அதிகரித்தது.

இந்நிலையில், கடந்த சில நாட்களுக்கு முன், ஒரு கிலோ தக்காளி, 15 ரூபாய்க்கும், 13 ரூபாய்க்கும் விற்கப்பட்டன. நேற்றைய நிலவரப்படி, 12 ரூபாய்க்கு விற்கப்பட்டது. இனி தக்காளி விலை அதிகரிக்க வாய்ப்பு இருக்காது, என, வியாபாரிகள் கருதுகின்றனர். நேற்றைய நிலவரப்படி தக்காளி, 12 ரூபாய், கத்தரிக்காய், 14, வெண்டை, 20, பீர்க்கன், 20, புடலை, 17 ரூபாய். சேனை, 15, கொத்தவரை, 25, பாகற்காய், 25, சாம்பல் பூசணி, 13, சர்க்கரை பூசணி, 10, பெரிய வெங்காயம், 16, சின்னவெங்காயம், 17, வாழைக்காய் (ஒன்று) ஆறு, வாழைப்பூ, ஏழு, தண்டு, மூன்று, மாங்காய், 17, வெள்ளரி, 35, வெள்ளரி பழம், 10, இஞ்சி, 40, கேரட், 36, பீட்ரூட், 26, பீன்ஸ், 70, முட்டைகோஸ், 13, காளிஃபிளவர், 15, பழங்களில் ஆப்பிள், 160, சாத்துக்குடி, 40, கறுப்பு திராட்சை, 40, பன்னீர், 50, வெள்ளை திராட்சை, 80, மாதுளை, 90, காபூல், 140, பப்பாளி, 14, கொய்யா, 30, சப்போட்டா, 20, தர்பூசணி, 10 ரூபாய்க்கு விற்கப்பட்டன.

பீன்ஸ் விலை, கடந்த சில நாட்களாகவே கிலோ, 70 ரூபாயில் இருந்து விலை இறங்கவே இல்லை. தக்காளி விலை, கடந்த வாரம் முழுவதும் உச்சத்தில் இரு ந்த போதும், மற்ற காய்கறி விலை அதிகரிக்காது, என வியாபாரிகள் தெரிவித்தனர்.

## பலாப்பழம் சீசன் சுளை விலை ரூ.10

பரமக்குடி : பரமக்குடியில் முக்கனிகளில் ஒன்றான பலாப்பழம் சீசன் களை கட்டியுள்ளது. பரமக்குடி மீன்கடைத்தெரு உள்ளிட்ட பழக்கடைகளில் புதுக்கோட்டை, பட்டுக்கோட்டை போன்ற ஊர்களில் இருந்து பலாப்பழங்கள் வந்துள்ளனமுழு பழம் ., தரத்திற்கு ஏற்ப, ரூ.30 முதல் 300 வரை என விற்பனையாகிறதுஇதுதவிர சிறு வியாபாரிகள்., சைஸ்க்கு ஏற்ப ஒரு சுளை ஒரு ரூபாய் முதல், ரூ.10 வரை விற்கின்றனர்வியாபாரிகள் . சிலர் கூறுகையில், ""பெரிய பழத்திற்கு அதிக பட்சமாக 100 ரூபாய் வரை லாபம் கிடைக்கிறது . இதன் சீசன் ஜூன் வரை தொடரும்," என்றனர்.

## **இரண்டாம் கட்ட நெல் களையெடுப்பு**

மூங்கில்துறைப்பட்டு: மூங்கில்துறைப்பட்டு பகுதியில் இரண்டாம் கட்ட நெல் களையெடுப்பு பணியில் கிராம மக்கள் ஈடுபட் டுள்ளனர். மூங்கில்துறைப்பட்டு அடுத்த வடபொன்பரப்பி, பிரம்மகுண்டம், ராவுத்தநல்லூர், புளியங் கோட்டை, புதூர் போன்ற கிராமங்களில் முதல் கட்ட சம்பா நெல் அறுவடை முடிந்து இரண்டாம் கட்ட நெல் பயி ரில் களையெடுத்து வருகின் றனர்இப்பகுதியில் உள்ள . கிராம பெண்கள் களையெடுப்பு பணியில் ஈடுபட் டுள்ளனர

## **பவேலூரில் பூக்கள் வ.ரத்து குறைவால் விலை அதிகரிப்புவிவசாயிகள் மகிழ்ச்சி :**

ப.வேலூர்: ஏல மார்க்கெட்டுக்கு பூக்கள் வரத்து குறைவால், அதன் விலை அதிகரித்துள்ளது. அதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

ப.வேலூர், பரமத்தி, கபிலர்மலை, ஜேடர்பாளையம், கரூர் மாவட்டம் வேலாயுதம்பாளையம், நொய்யல் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில், மல்லிகை, சம்பங்கி, அரளி, கோழிக்கொண்டை பூ வகைகள் பயிரிடப்பட்டுள்ளது.

இந்த பூக்கள் அறுவடை செய்யப்பட்டு, ப.வேலூரில் உள்ள தினசரி மார்க்கெட்டுக்கு ஏலத்துக்கு கொண்டு வரப்படுகிறது. அவ்வாறு கொண்டுவரப்பட்ட பூக்களை, நல்லூர்,

பாலப்பட்டி, வேலாயுதம்பாளையம், நொய்யல், ப.வேலூர், பரமத்தி போன்ற பகுதிகளில் இருந்து வரும் வியாபாரிகள், போட்டி போட்டு ஏலம் எடுக்கின்றனர்.

கோவில் திருவிழா, திருமணம் போன்ற விசேஷ நாட்களில், பூக்களின் விலை உயர்வதும், மற்ற காலங்களில் குறைவதும் வாடிக்கை. தற்போது, தண்ணீர் இல்லாததால், பூக்கள் உற்பத்தி வெகுவாக குறைந்துள்ளது. அதனால், நேற்று ஏல மார்க்கெட்டுக்கு வழக்கத்தை விட குறைவான பூக்கள் வந்தது.

அதனால், அதன் விலை உயர்ந்தது. கடந்த வாரம், ஒரு கிலோ மல்லிகை, 150 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. அது, நேற்று, கிலோ, 250 ரூபாய்க்கு ஏலம் போனது. 150 ரூபாய்க்கு ஏலம் போன சம்பங்கி ஒரு கிலோ, 200க்கும், 150க்கு விற்பனை செய்யப்பட்ட, அரளி பூ ஒரு கிலோ, 250 ரூபாய்க்கும் ஏலம் போனது.

அதேபோல், ஒரு கட்டு, பத்து ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட கோழிக்கொண்டை பூ, நேற்று கட்டு, 20 ரூபாய்க்கு ஏலம் போனது. இந்த விலை உயர்வு, பயிரிட்டுள்ள விவசாயிகளை, மகிழ்ச்சி அடையச் செய்துள்ளது.

**<u>இருப்பு வைக்கப்படும் சின்ன வெங்காயம்</u>**

பொங்கலூர் : நான்கு மாதங்களுக்கு முன், சின்ன வெங்காயம் கிலோ 80 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்பட்டதால், வெங்காயம் சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டினர்கடந்த கார்த்திகை பட்டத்தில் சாகுபடி செய்யப்பட்ட சின்ன . வெங்காயம், தற்போது அறுவடைக்கு வந்துள்ளதுவறட்சி காரணமாக ., உள்ளூர் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ள போதிலும், கர்நாடகா மாநிலத்தில் இருந்து சின்ன வெங்காயம் அதிகளவில் மார்க்கெட்டுக்கு வருகிறதுஎனவே ., வெளியூர் வெங்காயம், கிலோ 12 ரூபாய்க்கு விற்கப்படுகிறதுவிலை சரிவை தடுக்க ., விவசாயிகள், இருப்பு வைப்பதில் ஆர்வம் காட்டுகின்றனர்உள்ளூர் வெங்காயம் . இருப்புக்கு தாங்கும் என்பதால், வியாபாரிகளும், வெங்காயத்தை இருப்பு வைப்பதற்காக கொள்முதல் செய்கின்றனர். எனவே, உள்ளூர் வெங்காயத்துக்கு வெளியூர் காய்களை விட சற்று கூடுதல் விலை கிடைக்கிறதுஉள்ளூர் வெங்காயம் . அதிகபட்சமாக கிலோ 18 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்படுகிறதுவிவசாயிகள் . கூறுகையில், "நாற்று விட்டு நடவு செய்யப் படும்

ஹைபிரீட் ரகங்கள் நீண்ட நாட்கள் இருப்பு வைக்க இயலாதுசாதாரண வெங்காயம் . .அப்படி இல்லை இரண்டு மாதங்களுக்கு கெட்டுப்போகாதுஇவற்றுக்கு கூடுதல் விலை . கிடைக்கிறது," என்றனர்.

**முருங்கை விலை கடும் வீழ்ச்சி**

பொங்கலூர்: முருங்கை சீசன் களை கட்டியுள்ளதால், விலை கடும் வீழ்ச்சியை சந்தித்துள்ளது.முருங்கையை, விவசாயிகள், தனிப்பயிராகவும், ஊடுபயிராகவும் பயிரிட்டுள்ளனர். நீண்டநாள் பயனளிக்கும் மர முருங்கை, குறுகிய கால பயிரான செடி முருங்கை என இரண்டு வகைகள் உள்ளன. தற்போது, அனைத்து வகை முருங்கை மரங்களிலும், காய்கள் கொத்துக்கொத்தாக காய்த்துள்ளன.தேவையை விட விளைச்சல் அதிகமாக உள்ளதால், கடந்த மாதம் மூன்று ரூபாய் வரை விற்பனையான ஒரு காய், தற்போது, நெட்டை ஒரு ரூபாய்க்கும், குட்டை ஐம்பது காசுகளுக்கும் விற்பனையாகிறது. முதல் தர காய் மட்டுமே மார்க்கெட்டில் விலை போகிறது. சற்று தரம் குறைந்த முருங்கையை கேட்க ஆளில்லை. வெளியூர் வியாபா ரிகள், கிலோ ஆறு ரூபாய்க்கு கொள்முதல் செய்கின்றனர்.

**ரூ 3.53 கோடிக்கு காய்கறி வர்த்தகம்**

திருப்பூர் : திருப்பூர் வடக்கு உழவர் சந்தையில், கடந்த பிப்., மாதம் ரூ.3.53 கோடிக்கு காய்கறி வர்த்தகம் நடந்துள்ளது. காலை, மாலை என இரு வேளை நடக்கும் திருப்பூர் வடக்கு உழவர் சந்தைக்கு, பெருமாநல்லூர், அவிநாசி, மேற்குப்பதியை சேர்ந்த விவசாயிகள், அனைத்து வகையான காய்கறிகளை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். கடந்த ஜன., வரை உயர்ந்திருந்த காய்கறி விலை, தற்போது மிகவும் குறைந்துள்ளது. இதனால், சந்தையில் காய்கறி மொத்த வர்த்தகமும் குறைந்து வருகிறது. கடந்த பிப்., மாதம், காலை நேர சந்தைக்கு 4,515 விவசாயிகள், 1,592 டன்; மாலை நேர சந்தைக்கு 478 விவசாயிகள், 169 டன் காய்கறிகளை விற்பனைக்கு கொண்டு வந்துள்ளனர். காலையில் 3 கோடியே 18 லட்சத்து 95 ஆயிரம்; மாலையில், 34 லட்சத்து 53 ஆயிரம் ரூபாய் என மொத்தம் 3 கோடியே 53 லட்சத்து 48 ஆயிரம் ரூபாய்க்கு வர்த்தகம் நடந்துள்ளது. இது, ஜன., மாதத்தை விட 25 லட்சம் ரூபாய் குறைவு. 429 விவசாயிகள் ரூ.3.16 லட்சம் மதிப்பிலான காய்கறிகளை குளிர்பதன கிடங்கில் பாதுகாப்பாக வைத்துள்ளனர். விலை குறைந்ததால், கீரை வகைகளை விவசாயிகள்

குளிர்பதன கிடங்கில் இருப்பு வைத்து, விற்றுள்ளனர். கடந்த மாதம் ஒரு கட்டு எட்டு ரூபாயாக இருந்த கொத்துமல்லி, தற்போது 3 ரூபாயாக சரிந்துள்ளது

**மாம்பழத்தை பழுக்க வைக்க விவசாயத்துறை யோசனை**

மதுரை: 'மாம்பழங்களை செயற்கை முறையில் பழுக்க வைக்க கூடாது,' என்கிறது, உணவு பாதுகாப்பு துறை. 'எதிபான்' என்ற, வேதிப்பொருள் மூலம், இயற்கை முறையில் பழுக்க வைக்கலாம், என விவசாயத் துறையினர் தெரிவித்தனர்.கடந்தாண்டு 'கார்பைடு' கற்கள் மூலம் மாங்காய்கள், பழமாக மாற்றப்பட்டன. இக்கற்களால், தோலின் மேற்புறத்தை மட்டும், மஞ்சள் நிறமாக்கமுடியும். உட்பகுதி காயாக இருப்பதால், சாப்பிடும்போது வயிற்று வலி ஏற்படும்.எனவே கார்பைடு முறையில், பழுக்க வைக்கப்பட்ட மாம்பழங்களை, உணவு பாதுகாப்பு அலுவலர்கள், பறிமுதல் செய்து அழித்தனர். தற்போது, மாம்பழங்கள் வரத்து துவங்கி விட்டது.பழங்களை பழுக்க வைக்க, 'எதிபான்' வேதிமருந்தை பயன்படுத்தலாம் என, விவசாயத்துறையினர் பரிந்துரைத்துள்ளனர். அந்த மருந்தை, மாங்காய்களுக்கு நடுவில் ஒரு பாத்திரத்தில் வைத்தால், மறுநாள் பழுத்துவிடும். 'ஸ்பிரே' முறையில் தெளிக்கக்கூடாது என, தெரிவித்துள்ளனர். செயற்கை முறையில் பழுக்க வைக்க, உணவு பாதுகாப்பு சட்டம் தடை விதிக்கிறது. ஆனால் இந்த முறையில் பழுக்க வைத்த பழங்களை பறிமுதல் செய்வது, தவறு என விவசாயத் துறையினர் தெரிவிக்கின்றனர்.கலெக்டர் தலைமையில் விவசாயத்துறை, உணவு பாதுகாப்பு அலுவலர்கள் இணைத்து பேசி, தெளிவுபடுத்தினால் தான், இப்பிரச்னைக்கு தீர்வு காண முடியும்.

**தக்காளி, வெங்காயம் விலை 'ருசி'க்குது**

மதுரை மாட்டுத்தாவணி காய்கறி மார்க்கெட்டில், முட்டைக்கோஸ், தக்காளி, வெங்காயம் விலை குறைவாகவே உள்ளதுமுருகன்.எஸ்.சங்கத் தலைவர் பி . கூறியதாவதுநேற்று ஒரு : .கிலோ கத்தரிக்காய் ரூ10 முதல் 15, தக்காளி 3 முதல் 5, கேரட் 15, பீன்ஸ் 40, முட்டைக்கோஸ் 6, டர்னிப் 20, காலிபிளவர் 10 முதல் 15, வெண்டைக்காய் 20, கீரை 10, முருங்கைக்காய் 20, புடலங்காய் 12, பூசணிக்காய் 8, கறிவேப்பிலை 30, கொத்தமல்லி 12, புதினா 10, இஞ்சி 70 முதல் 80, பச்சை மிளகாய் 12. பட்டர் பீன்ஸ் 80 முதல் 90, சோயாபீன்ஸ் 40 முதல் 50, சுரைக்காய் 7, பீர்க்கங்காய் 15, பச்சைப் பட்டாணி 30,

பாகற்காய் பெரியது 20, சிறியது 30, பல்லாரி 10 முதல் 12, சின்ன வெங்காயம் 10 முதல் 15, கருணைக் கிழங்கு 35, சேனைக்கிழங்கு 15, சேம்பு 30, முள்ளங்கி 14, உருளைக்கிழங்கு 15 முதல் 20க்கு விற்பனையானதுபொதுவாக முட்டைக்கோஸ் ., தக்காளி, வெங்காயம் போன்றவை சில வாரங்களாக குறைந்த விலைக்கு விற்றது . இந்நிலை ஒரு மாதம் வரை நீடிக்க வாய்ப்புள்ளது, என்றார்.

**ரோஜா விலை உயர்வு ஏன்**

மதுரை பூ வியாபாரிகள் சங்கத் தலைவர் சோராமச்சந்திரன். கூறியதாவது: மல்லிகை ஒரு கிலோ ரூ .150, பிச்சிப்பூ 200, சம்பங்கி 250, கோழிக்கொண்டை ரூ .50, செவ்வந்திப்பூ 80, அரளிப்பூ 50, செண்டுப்பூ 30, மெட்ராஸ் மல்லி 150 முதல் 200, கனகாம்பரம் 300, மரிக்கொழுந்து 25, பட்டன்ரோஸ் 150, சாதா ரோஜா 120க்கு விற்றதுவரத்து கு .றைவால், ரூ. 60 முதல் 70 வரை விற்ற கோழிக் கொண்டை விலை குறைந்தும், ரூ .100 வரை விற்பனையாகும் சாதாரண ரோஜா ரூ .120க்கும் விற்றது, என்றார்.

**பொய்கை மாட்டுச்சந்தையில் மாடுகள் ரூ.55 ஆயிரம் வரை விற்பனை**

வேலூர், :வேலூர் அடுத்த பொய்கையில் மாட்டுச்சந்தை வழக்கம்போல் நேற்று முன்தினம் காலை 6 மணிக்கு கூடியது.

இதில் வேலூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், தருமபுரி, ஒசூர் உள்ளிட்ட சுற்றுவட்டார மாவட்டங்கள் மட்டுமின்றி, ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட வெளிமாநிலங்களில் இருந்தும் 700க்கும் மேற்பட்ட மாடுகள் விற்பனைக்கு கொண்டுவரப்பட்டன.

இதில் பசு மாடுகள் ரூ.10 ஆயிரம் முதல் ரூ.55 ஆயிரம் வரையிலும், எருது மாடுகள் ரூ.15 ஆயிரம் முதல் ரூ.50 ஆயிரம் வரையிலும், எருமை மாடுகள் ரூ.25 ஆயிரம் முதல் ரூ.65 ஆயிரம் வரையிலும் விற்பனை செய்யப்பட்டது.

வெயிலின் அளவு அதிகமாக இருந்ததாலும், மாடுகளின் விற்பனை மந்தமாக இருந்ததாலும் மதியம் ஒரு மணிக்கே சந்தை முடிவடைந்தது.

**வேளாண் பல்கலைக்கழகத்தில் உணவுப்பொருள் தயாரிக்கும் பயிற்சி**

பதிவு செய்த நேரம்:2014-04-11 11:59:55

கோவை, : தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் சிறு தானியங்களில் இருந்து மதிப்பூட்டப்பட்ட உணவுப்பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி வரும் 7ம் தேதி மற்றும் 8ம் தேதி நடக்கிறது.

இதில், பாரம்பரிய உணவுகள், பிழிதல், அடுமனைப்பொருட்கள், உடனடி தயார்நிலை உணவுகள் செய்ய பயிற்சியளிக்கப்படுகிறது.

இப்பயிற்சியில் சேர விருப்பம் உள்ளவர்கள் ரூ.1000 செலுத்தி பெயரை முன்பதிவு செய்து கொள்ளலாம்.

நேரில் வந்து பெயரை பதிவு செய்து கொள்ள இயலாதவர்கள் பயிற்சி கட்டண தொகையை வரைவோலை மூலம் பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோவை என்ற பெயரில் கோவையில் உள்ள பாரத ஸ்டேட் வங்கியில் பெறத்தக்க வகையில் எடுத்து பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோவை -641-0011 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். பதிவு செய்ய இறுதி நாள் 7ம் தேதியாகும்.

இத்தகவலை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

**காய்கறிகள் உற்பத்தி கடும் பாதிப்பு**

பதிவு செய்த நேரம்:2014-04-11 12:06:57

சத்தியமங்கலம், : ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலத்தை அடுத்த தாளவாடி மலைப்பகுதியில் கடும் வறட்சி நிலவுவதால் வேலையில்லா திண்டாட்டமும், ஆடுமாடுகளுக்கு தீவன பற்றாக்குறையும் ஏற்பட்டுள்ளது.

தாளவாடி மலைப்பகுதி கடல் மட்டத்திலிருந்து சுமார் 2000 அடி உயரத்தில் அமைந்துள்ளதால் ஆண்டு முழுவதும் குளிர்ந்த காற்று வீசும்.அடிக்கடி மழை பெய்வ தால் விவசாயம் செய்வதற்கு உகந்த பகுதியாக உள்ளது. சுற்றுவட்டாரத்தில் உள்ள தொட்டகாஜனூர், திகினாரை, பனகள்ளி, அருள்வாடி, நெய்தாளபுரம், திகினாரை, தலமலை, எரகனள்ளி உள்ளிட்ட 20 க்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ள விவசாய விளைநிலங்களில் கரும்பு, மஞ்சள், கேழ்வரகு, மக்காச்சோளம், வெங்காயம், உருளைக்கிழங்கு, முட்டைகோஸ், காலிபிளவர், பீன்ஸ், முள்ளங்கி உள்ளிட்ட காய்கறிப் பயிர்கள் அதிக அளவில் பயிரிடப்படுகின்றன.

கடந்த ஆண்டு பருவ மழை பொய்த்ததால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து ஆழ்குழாய் கிணறு வற்றிவிட்டன. வெயிலின் உக்கிரம் அதிகரித்துள்ளதால் கரும்பு உள்ளிட்ட பயிர்காய்ந்து கருகுகின்றன. வறட்சி காரணமாக விளைச்சல் குறைந்து சத்தி, கோவை,

கோபி, ஈரோடு உள்ளிட்ட நகரங்களுக்கு காய்கறி அனுப்புவதும் குறைந்துள்ளது. இதுதவிர வனப்பகுதி மற்றும் சாலையோரங்களில் உள்ள மரங்களும் காய்ந்து கருகி காட்சியளிக்கின்றன.

விவசாயம் மட்டுமின்றி  கிராமப்பகுதிகளில் ஊராட்சிக்கு சொந்தமான ஆழ்குழாய் கிணறுகள் வற்றிவிட்டதால் குடிநீர் விநியோகமும் பாதிக்கப்பட்டுள்ளது. மலைப்பகுதியில் 200 அடி ஆழத்தில் இருந்த நீர்மட்டம் தற்போது 800 அடி வரை கீழே சென்றுவிட்டது. வறட்சியினால் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதால் விவசாய கூலி தொழிலாளர்கள் வேலை கிடைக்காமல் திண்டாடும் நிலை ஏற்பட்டுள்ளது. கால்நடைகளுக்கு தீவனப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் சமாளிக்கமுடியாமல் அடிமாட்டு விலைக்கு விற்பனை செய்து வருகின்றனர். விரைவில் மழை பெய்து நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்தால் மட்டுமே விவசாயிகள் வாழ முடியும். தாளவாடி மலைப்பகுதியை வறட்சிப்பகுதியாக அறிவித்து நிவாரணம் வழங்க வேண்டும் என இப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**பவானிசாகர் அணையில் இருந்து கீழ்பவானி வாய்க்காலில் புன்செய் பாசனத்துக்கு உயிர் தண்ணீர் திறப்பு**

பதிவு செய்த நேரம்:2014-04-11 12:06:16

ஈரோடு, : பவானிசாகர் அணையில் இருந்து கீழ்பவானி பாசனத்துக்காக 15 நாட்களுக்கு தண்ணீர் திறக்க தேர்தல் கமிஷன் அனுமதியளித்தது. இதனை அடுத்து நேற்று மாலை 6 மணி முதல் உயிர் தண்ணீர் திறக்கப்பட்டது.

ஆண்டுதோறும் பவானிசாகர் அணையில் இருந்து கீழ்பவானி வாய்க்காலில் புன்செய் பாசனத்துக்குட்பட்ட 1 லட்சத்து 11500 ஏக்கர் நிலங்களுக்கு ஜனவரி முதல் வாரம் முதல் தண்ணீர் திறக்கப்படும். 20111-14ம் பாசன ஆண்டில் நன்செய் பாசனத்துக்கு மட்டுமே ஆகஸ்ட் 22ம் தேதி முதல் ஜனவரி 8ம் தேதி வரை கீழ்பவானி வாய்க்காலில் தண்ணீர் திறக்கப்பட்டது. கடும் வறட்சி காரணமாக பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வெகுவாக சரிவடைந்ததால் ஜனவரி முதல் வாரத்தில் புன்செய் பாசனத்துக்கு தண்ணீர் திறக்க முடியாத நிலை ஏற்பட்டது.

நீலகிரி மாவட்டத்தின் நீர்மின் அணைகளில் இருந்து பவானிசாகர் அணைக்கு தண்ணீர் பெற்று புன்செய் பாசனத்துக்கு திறக்க வலியுறுத்தி கீழ்பவானி முறைநீர் பாசன விவசாயிகள் சங்கங்களின் கூட்டமைப்பு, தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில் சென்னை ஐகோர்ட்டில் 2 ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டது. இதற்கிடையே தேர்தல் விதிமுறைகள் அமலுக்கு வந்ததால் கீழ்பவானி வாய்க்காலில் தண்ணீர் திறப்பு தொடர்ந்து தள்ளிப்போனது. இதுதொடர்பாக கீழ்பவானி முறைநீர் பாசன விவசாயிகள் சங்கங்களின் கூட்டமைப்பும், தமிழக விவசாயிகள் சங்கம் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளும் தண்ணீர் திறக்க கோரி பொதுப்பணித்துறை, மின்வாரிய அமைச்சர்களையும், சம்மந்தப்பட்ட அதிகாரிகளையும் நேரில் சந்தித்து வலியுறுத்தினர்.

பவானிசாகர் அணையில் இருந்து கீழ்பவானி புன்செய் பாசனத்துக்கு தண்ணீர் திறப்பதற்கான நிலையாணையை பயன்படுத்தி தண்ணீர் திறந்து விடக்கோரியும் தொடர்ந்து விவசாயிகள் வலியுறுத்தி வந்தனர். இதை ஏற்று பொதுப்பணித்துறையினர் நிலையாணையை பயன்படுத்தி கீழ்பவானி வாய்க்காலில் புன்செய் பாசனத்துக்கு 15 நாட்களுக்கு தண்ணீர் திறக்க தடை யில்லா சான்று (என்ஓசி) வழங்க தேர்தல் ஆணையத்திடம் கோரினர். இதேபோல நேற்று முன்தினம் தமிழக விவசாயிகள் சங்கம் (நாராயணசாமி நாயுடு பிரிவு) சார்பில் அதன் மாவட்ட தலைவர் பெரியசாமி கோவையில் பிரசாரத்துக்காக வந்த முதல்வர் ஜெயலலிதாவை சந்தித்து கோரிக்கையும் விடுத்தார்.

இந்நிலையில் நேற்று தேர்தல் ஆணையம் திடீ ரென தண்ணீர் திறக்க ஒப்புதல் வழங்கி தடை யில்லா சான்றை வழங்கியது. இதன் அடிப்படையில் உடனடியாக தண்ணீர் திறப்பதற்கான அரசாணை வெளியிடப்பட்டது. இதைதொடர்ந்து நேற்று மாலை 6 மணி முதல் கீழ்பவானி வாய்க்காலில் புன்செய் பாசனத்துக்காக உயிர் தண்ணீர் திறக்கப்பட்டது.

தண்ணீர் திறப்பு குறித்து பொதுப்பணித்துறையினர் கூறியதாவது: கீழ்பவானி வாய்க்காலில் புன்செய் பாசனத்துக்குட்பட்ட பகுதிகளில் காய்ந்து கிடக்கும் தென்னை, கரும்பு, வாழை போன்ற பயிர்களை காப்பாற்றவும், குடிநீர் மற்றும் போர்வெல் கிணறுகளின் நீர்மட்டம் உயரவும், கால்நடைகள் குடிப்பதற்கு தண்ணீர் தேவைக்காகவும் அரசாணையின் அடிப்படையில் 15 நாட்களுக்கு உயிர் தண்ணீர் பவானிசாகர்

அணையில் இருந்து கீழ்பவானி வாய்க்காலில் திறக்கப்பட்டுள்ளது. துவக்கத்தில் 500 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு படிப்படியாக இதன் அளவு அதிகரிக்கப்படும். வரும் 17ம் தேதி மாலை வரை சுமார் 11 டிஎம்சி., தண்ணீர் வாய்க்காலில் உயிர் தண்ணீராக திறக்கப்படும். இவ்வாறு பொதுப்பணித்துறையினர் தெரிவித்தனர்.

நேற்று மாலை 6 மணி நிலவரப்படி பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 52.711 அடியாக இருந்தது. அணைக்கு 6211 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. ஆற்றில் 150 கனஅடி வீதமும் கீழ்பவானி வாய்க்காலில் 500 கனஅடி வீதமும் தண்ணீர் திறக்கப்பட்டது.

**வேளாண் விளைபொருள் விலை நிர்ணய ஆணையத்துக்கு தன்னாட்சி அதிகாரம் தர கோரிக்கை**

பதிவு செய்த நேரம்:2014-04-11 10:48:23

பெரம்பலூர்,: வேளாண் விளைபொருள் விலை நிர்ணய ஆணையத்திற்கு தன்னாட்சி அதிகாரம் வழங்கவேண்டும் என்று தமிழக விவசாயிகள் சங்க செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பெரம்பலூரில் தமிழக விவசாயிகள் சங்கத் தின் பெரம்பலூர், திருச்சி, அரியலூர் மாவட்டங்களுக் கான செயற்குழு கூட்டம், துறையூர் சாலையிலுள்ள மதனகோபால சுவாமி திருமண மண்டபத்தில் நேற்று நடந்தது. கூட்டத்திற்கு மாநில செயலாளர் ராஜா சிதம்பரம் தலைமைவகித்தார். பெரம்பலூர் மாவட்டதலைவர் மாணி க்கம், திருச்சி மாவட்ட செயலாளர் ஜடமங்கலம் கணேசன், அரியலூர் மாவ ட்டதலைவர் அன்பழகன், கரூர் மாவட்டச் செயலாளர் முருகேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில், நெல், பருத்தி, மக்காச்சோளம், எள், கடலை, மஞ்சள் உள் ளிட்ட வேளாண் விளைபொருட்களுக்கு மத்தியஅரசின் வேளாண் விளை பொருள் விலை நிர் ணய ஆணையம் ஆண்டுதோறு ம் பரிந்துரைக்கும் விலையை பிரதமர் தலைமையில் செயல்பட்டுவரும் குழு தலையிட்டு விவசாயிகளுக்கு உரியவிலை கிடைக்காமல் செய்து வருகிறது. இதனைத்தடுக்க வேளாண் விளைபொருள் விலை நிர்ணய ஆணையத்திற்கு

தன்னாட்சி அதிகாரம் வழங்கவேண்டும். மழை, வெள்ளம், வறட்சி சமயங்களில் விவசாயப் பயிர்கள் பாதிக்கப்படும்போது, விவசாயிகளுக்கு தனிநபர் இழப்பீடு கிடைக்கும் வகையில் தேசிய வேளாண் பயிர்காப்பீடு திட்டத்தில் மாற்றம் செய்து பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு காப்பீட்டு இழப்பீடு வழங்கவேண்டும்.

தமிழகத்தில் அதிமுக அரசு ஆட்சிபொறுப்பேற்று 3 ஆண்டு ஆகிவிட்ட நிலையில் மின்தட்டுப்பாட்டை தீர்க்க தமிழக முதல்வர் எவ்வித நடவடிக்கையும் எடுக்காததோடு, முந்தைய திமுக அரசு தொடங்கிய மின்உற்பத்தித் திட்டங்களை கிடப்பில் போட்டுவருகிறது. இதனல் மின்சாரமின்றி மக்கள் தவிக்கும்நிலை ஏற்பட்டுள்ளதால் விவசாயத்திற்கு தடையற்ற மின்சாரம் வழங்க வேண்டும். பெரம்பலூர் மாவட்டத்தில் கடந்த திமுக ஆட்சியில், பல்லாயிரக் கணக்கானோருக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் நோக்கில் 3ஆயிரம் ஏக்கர் பரப்பில் தொடங்கப்பட்ட சிறப்புப் பொரு ளாதர மண்டலத்தை விரைந்து செயல்படுத்த வேண்டும். பெரம்பலூர் மாவட்டத் தில் ரூ. 100கோடி மதிப்பீ ட்டில் கொண்டுவரப்பட்ட கொள்ளிடம் கூட்டுக்குடிநீர்த் திட்டப்பணிகளை நிறைவேற்ற வேண்டும். பெரம்பலூர் மாவட்டத் தில் புதிய ரயில் இருப்புப்பாதை அமைக்கும் திட்ட த்தை செயல் படுத்தவேண் டும். கடந்த காலங்களில் தமிழக விவசாயிகள் சங்கம் காங்கிரஸ், திமுக, அதிமுக என மாறிமாறி ஆதரித்து வாக்களித்தும் விவசாயிகளின் கோரிக்கை கள் நிறைவேற்றப்படாத காரணத்தால், செயற்குழு முடிவுப்படி மாற்றத்தை ஏற்படுத்த வேண்டி விவசாயி களின் கோரிக்கைகளை நிறைவேற்றித்தர உறுதியளித்த ஐஜேகே கட்சித் தலைவர் பாரிவேந்தருக்கு ஆதரவளிப்பது. சிதம்பரம் தொகுதியில் பாமக வேட்பாளர் சுதாமணிரத்தினத்தை ஆதரிப்பது என முடிவுசெய்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில், வழக்கறிஞ ர் ரேணு,பெரம்பலூர் மாவ ட்டச் செயலாளர் நீலகண் டன், பொருளாளர் மணி, திருச்சி மாவட்ட துணைத்தலைவர் மணிவே ல், அரிய லூர் மாவட்டச் செயலாளர் விஸ்வநாதன், பொருளாளர் தமிழவேள், வட்டார பொ றுப்பாளர் கள் ஓலையூர் சுந்தரராஜன், மதியழகன், கீழப்புலியூர் ராஜேந்திரன், செல்லக்கருப்பு, சுந்தரராஜன், அருணாசலம், துரைசாமி, சுப்ரமணியன், ரெங்கநாதன், ரகுபதி, துரை ராஜ், கோவிந்தசாமி, சுப்ரமணியன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தினமணி

பாலாற்றில் தடுப்பணைகள் கட்டக் கோரி விவசாயிகள் மாநாடு

By செங்கல்பட்டு,

First Published : 11 April 2014 12:33 AM IST

பாலாற்றில் தடுப்பணைகள் கட்டக் கோரியும், காவிரி, தென்பெண்ணை ஆறுகளுடன் பாலாற்றை இணைக்கக் கோரியும், ஏரி, குளங்களைப் பாதுகாக்கவும் உள்ளிட்ட கோரிக்கைகளை, மத்திய, மாநில அரசுகளின் கவனத்துக்கு கொண்டு செல்லும் வகையில் விவசாயிகள் சங்க சிறப்பு மாநாடு செங்கல்பட்டு பழைய பஸ் நிலையத்தில் நடைபெற்றது.

விவசாயச் சங்கங்கள் மற்றும் பொதுநலச் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில், நடைபெற்ற விவசாயிகள் சிறப்பு மாநாட்டுக்கு காஞ்சிபுரம் மாவட்ட பாலாறு படுகைகள், விவசாயிகள் சங்கத் தலைவர் பழையனூர் மு.மணி தலைமை தாங்கினார்.

காஞ்சிபுரம் மாவட்ட மரம் வளர்ப்போர் சங்கத் தலைவர் மற்றும் எழில்சோலை அறக்கட்டளை நிறுவனர் தண்டலம் பா.ச.மாசிலாமணி வரவேற்றார்.

மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை கரும்பு உற்பத்தியாளர் சங்கத் தலைவர் இடையம்பதூர் சி.இராமசாமி, செங்கை நகர வளர்ச்சி மன்ற செயலர் எம். ராஜி, காஞ்சிபுரம் மாவட்ட பாலாற்றுப் படுகை விவசாயிகள் சங்க துணைத் தலைவர் பி.கிருஷ்ணன், பத்மாவதி சர்க்கரை ஆலை கரும்பு உற்பத்தியாளர் சங்க செயலர் எஸ்.தனபால் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.இந்திய பசுமைத் தீர்ப்பாயத் தலைவர் நீதியரசர் பி.ஜோதிமணி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார்.

சமூக ஆர்வலரும், முன்னாள் எம்.எல்.ஏ.வுமான எஸ்.டி.உக்கம்சந்த், தமிழ்நாடு விவசாயிகளின் கூட்டமைப்பு செ.நல்லசாமி, அக்கரிபுத்தி சிகாமணி, மரம் கருணாநிதி உள்ளிட்டோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் பெரிய அளவிலான தடுப்பணைகள் கட்டுவதன் மூலம் நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக உயரும்.

காஞ்சிபுரம், வாலாஜாபாத், செங்கல்பட்டு, மதுராந்தகம், மேல்மருவத்தூர், மறைமலைநகர், சென்னை போன்ற நகரங்கள் மற்றும் கரையோர கிராமங்களுக்கு குடிநீர் தங்கு தடையின்றி கிடைக்கும்.

மொத்தத்தில் காஞ்சிபுரம் மாவட்டம் பசுமை நிறைந்த மாவட்டமாக விளங்கும் எனவும் பாலாற்றில் தடுப்பணைகள் கட்டுவதனால் உண்டாகும் நன்மைகள் குறித்து மாநாட்டில் விவரிக்கப்பட்டது. காஞ்சிபுரம் மாவட்ட மரம் வளர்ப்போர் சங்க துணைத் தலைவர் இல.வேணு நன்றி கூறினார்.

## தேனி அருகே சூறைக் காற்றில் வாழை மரங்கள் சேதம்

By தேனி

First Published : 11 April 2014 12:24 AM IST

தேனி அருகே அரண்மனைப்புதூர் பகுதியில், புதன்கிழமை இரவு வீசிய சூறைக் காற்றில் 40 ஏக்கர் பரப்பளவில் வாழை மரங்கள் சேதமடைந்துள்ளன.

தேனி பகுதியில் புதன்கிழமை இரவு சூறைக் காற்றுடன் கூடிய மழை பெய்தது. இதில், அரண்மனைப்புதூர், கொடுவிலார்பட்டி, நாகலாபுரம் ஆகிய பகுதிகளில் சூறைக் காற்றின் வேகம் அதிகமாக இருந்ததால், வாழை மரங்கள் ஒடிந்து விழுந்தன. தேனி ஒன்றியத்துக்கு உள்பட்ட பல்வேறு இடங்களில் மொத்தம் 40 ஏக்கர் பரப்பளவில் வாழை மரங்கள் சேதமடைந்துள்ளன.

வாழை தார் குலை தள்ளிய நிலையில், சூறைக் காற்றால் மரங்கள் ஒடிந்து சேதமடைந்துள்ளதால், பெரும் நஷ்டத்தை சந்திக்க நேரிடும் என்று விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

## கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலை உயர்வு

By பல்லடம்,

First Published : 11 April 2014 03:21 AM IST

தமிழகம் மற்றும் கேரள மாநிலங்களில் கறிக்கோழி விற்பனை மார்க்கெட் நிலவரத்துக்கேற்ப திருப்பூர் மாவட்டம் பல்லடத்தை தலைமையிடமாக கொண்டு செயல்படும் பி.சி.சி.(பிராய்லர் கோர்டினேஷன் கமிட்டி) தினந்தோறும் பண்ணைக் கொள்முதல் விலையை நிர்ணயம் செய்கிறது.புதன்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ. 63 ஆக இருந்தது. கோழி இறைச்சி நுகர்வு அதிகரித்ததால் வியாழக்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ. 68 ஆக விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

முட்டை விலை: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு வியாழக்கிழமை அறிவித்த முட்டை பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ. 2.50, சென்னையில் ரூ. 2.75.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 47.37 அடி

By ஈரோடு,

First Published : 11 April 2014 03:27 AM IST

பவானிசாகர் அணை நீர்மட்டம் வியாழக்கிழமை நிலவரப்படி 47.37 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு 116 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 150 கன அடி நீரும், வாய்க்காலில் 2,300 கன அடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர் இருப்பு 3.83 டி.எம்.சி.

பரமத்திவேலூர் ஏலச் சந்தையில் வாழைத்தார் விலை உயர்வு
By பரமத்தி வேலூர்

First Published : 11 April 2014 05:20 AM IST

பரமத்தி வேலூர் ஏலச் சந்தையில் வாழைத்தார்களின் விலை திடீர் என உயர்ந்துள்ளதால், வாழைப் பயிர் செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

பரமத்தி வேலூர் காவிரி கரையோரப் பகுதிகளான பாண்டமங்கலம் , பொத்தனூர், குச்சிபாளையம், வேலூர் , அனிச்சம்பாளையம், நன்செய் இடையாறு, குப்புச்சிபாளையம் , ஓலப்பாளையம், செங்கப்பள்ளி, மோகனூர் உள்ளிட்ட பகுதிகளில் பல்லாயிரக்கணக்கான ஏக்கரில் வாழைப் பயிர் செய்யப்பட்டுள்ளது.

இங்கு விளையும் வாழைத்தார்கள் கேரளம், கர்நாடகம், ஆந்திரம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கும், சேலம், கோவை, நீலகிரி, கரூர்,திண்டுக்கல் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களுக்கும் தினந்தோறும் லாரிகள் மூலம் அனுப்பப்பட்டு வருகிறது. வாழைத்தார்களை பல்வேறு மாநிலங்களில் இருந்து வியாபாரிகள் மொத்தமாகவும் வாங்கிச் செல்கின்றனர்.

ஏலச் சந்தைக்கு கொண்டு வரப்படும் வாழைத்தார்கள் ஏலம் விடப்படுகின்றன. கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் பூவன் வாழைத்தார் ரூ.200-க்கும், ரஸ்தாலி வாழைத்தார் ரூ.150-க்கும், பச்சை லாடன் வாழைத்தார் ரூ.200-க்கும், கற்பூரவள்ளி வாழைத்தார் ரூ.200-க்கும் ஏலம் போனது.

வியாழக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் பூவன் வாழைத்தார் ரூ.350-க்கும், ரஸ்தாலி வாழைத்தார் ரூ.300-க்கும், பச்சை லாடன் வாழைத்தார் ரூ.300-க்கும், கற்பூரவள்ளி வாழைத்தார் ரூ.300-க்கும் ஏலம் போனது. மொந்தன் வாழைக்காய் ஒன்று ரூ.6-க்கு விற்பனையானது. வெளியூர்களில் இருந்து வியாபாரிகள் அதிக அளவில் வந்திருந்ததால், வாழைத்தார்களின் விலை திடீர் என உயர்ந்துள்ளது. இந்த திடீர் விலை ஏற்றத்தால், வாழைப் பயிர் செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

நாமக்கல்லை குளிர்வித்த கோடை மழை

By நாமக்கல்,

First Published : 11 April 2014 05:20 AM IST

கோடை வெயில் சுட்டெரித்த நிலையில், நாமக்கல்லில் வியாழக்கிழமை மாலை பெய்த பலத்த மழை குளிர்ச்சியை ஏற்படுத்தியது.

சித்திரை மாத கடைசி 7 நாள்களும், வைகாசி மாத முதல் 7 நாள்களும் அக்னி நட்சத்திரம் ஆகும். இந்த அக்னி நட்சத்திர காலத்தில் வெயிலின் தாக்கம் மிக அதிகமாகக் காணப்படும். ஆனால், நிகழாண்டு அக்னிக்கு ஒரு மாதத்துக்கு முன்பாகவே மிகக் கடுமையாக வெயிலின் தாக்கம் நிலவுகிறது.

இதன்படி, நாமக்கல் மாவட்டத்தில் கடந்த 10 நாள்களுக்கு மேலாகவே பகலில் வெப்ப அளவுகள் 100 டிகிரி பாரன்ஹீட்டுக்கு மேல் 105 டிகிரி பாரன்ஹீட் வரை உள்ளது. இதனால், பொதுமக்கள், முதியவர்கள் மிகுந்த சிரமத்துக்குள்ளாகி வருகின்றனர். தவிர, பகல் முழுவதும் வாட்டியெடுக்கும் வெயிலால் வீட்டுச் சுவர்கள் சூடாகிவிடுவதால், இரவில் வீடுகளுக்குள் தூங்க முடியாமலும் மக்கள் அவதிக்குள்ளாகின்றனர்.

தொடரும் இந்தப் பாதிப்புகளுக்கு சற்று ஆறுதல் அளிக்கும் வகையில், வியாழக்கிழமை மாலை நாமக்கல்லில் பலத்த மழை பெய்தது. பிற்பகல் 2 மணி முதலே கரும் மேகங்கள் சூழ்ந்த நிலையில் காணப்பட்ட வானம், பிற்பகல் 3.15 மணியளவில் மழை பெய்யத் தொடங்கியது. மழை சுமார் 30 நிமிஷங்களுக்கு மேல் பெய்தது.

மழையைத் தொடர்ந்து, மாலை முழுவதும் குளிர்ந்த காற்று வீசியது மக்களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

சேலம் மாவட்டத்தில் ஆயிரம் டன் விதைகள் கையிருப்பு

By சேலம்

First Published : 11 April 2014 05:12 AM IST

சேலம் மாவட்டத்தில் நெல், பருத்தி உள்ளிட்ட பல்வேறு பயிர்களின் விதைகள் சுமார் ஆயிரம் டன் அளவில் கையிருப்பில் உள்ளதாக விதைச் சான்று உதவி இயக்குநர் வே.ராஜதுரை தெரிவித்தார்.

சேலம் மாவட்டத்தில் கோடை மழை விரைவில் தொடங்கும் என்று விவசாயிகளிடையே எதிர்பார்ப்பு எழுந்துள்ள நிலையில், ராஜதுரை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

விவசாயிகளுக்கு தரமான சான்று விதைகள் கிடைக்க வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டு கடந்த 1979-ஆம் ஆண்டு முதல் கோவையைத் தலைமையிடமாகக் கொண்டு விதைச் சான்றளிப்புத் துறை செயல்பட்டு வருகிறது. சேலம் மாவட்டத்தில் கடந்த 1985-ஆம் ஆண்டு முதல் விதைச்சான்று உதவி இயக்குநர் அலுவலகம் செயல்பட்டு வருகிறது.

நல்ல தரமான, அதிகபட்ச முளைப்புத்திறன் கொண்ட, ரக குணாதிசயங்கள் மாறாத, கலப்படமில்லாத, சீரான பயிர் வளர்ச்சி, ஒரே சமயத்தில் பூத்து, முதிர்ந்து, அறுவடை செய்யக் கூடிய வகையில், அதிக மகசூல் தரக் கூடிய, பூச்சி நோய்த் தாக்குதல் இல்லாத விதைகளை விவசாயிகளுக்கு கிடைக்கச் செய்யும் நோக்கில் இந்தத் துறை செயல்படுகிறது.

இதன் அடிப்படையில், 2013-14 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் 592 டன் நெல், 27 டன் சிறு தானியங்கள், 7 டன் பருத்தி, 201 டன் பயறு வகைகள், 202 டன் எண்ணெய் வித்துகள், 0.86 டன் காய்கறிகள் என மொத்தம் 1,030 டன் சான்று பெற்ற விதைகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

இந்த சான்று பெற்ற விதைகள், மாவட்டத்தில் உள்ள அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் இருப்பில் உள்ளன. எனவே, அந்தந்த பருவத்துக்கு ஏற்ற சான்று பெற்ற விதைகளை விவசாயிகள் பெற்று, உற்பத்தி செய்து, அதிக மகசூல், லாபம் பெறலாம் என்று விதைச்சான்று உதவி இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
வெள்ளிக்கிழமை, ஏப்ரல் 11, 2014

**கடந்த நிதி ஆண்டில் 3.24 லட்சம் டன் ரப்பர் இறக்குமதி**



கடந்த 2013–14–ஆம் நிதி ஆண்டில் இயற்கை ரப்பர் இறக்குமதி 49 சதவீதம் அதிகரித்து 3.24 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது.

சென்ற ஆண்டில் கனமழை காரணமாக உற்பத்தி பாதிக்கப்பட்டது. இதனால் ரப்பர் உற்பத்தி 7.6 சதவீதம் குறைந்து 8.44 லட்சம் டன்னாக சரிவடைந்தது. அதேசமயம், இதே காலத்தில் ரப்பர் பயன்பாடு 9.73 லட்சம் டன்னிலிருந்து 9.77 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. தேவையை காட்டிலும் உற்பத்தி குறைவாக இருந்ததால் ரப்பர் இறக்குமதி அதிகரித்துள்ளது.

இந்தோனேஷியா, வியட்நாம், மலேசியா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளில் இருந்து இயற்கை ரப்பர் இறக்குமதி செய்யப்படுகிறது.

**நாமக்கல்லில் சூறைகாற்றுடன் கோடைமழை கொட்டியது**



நாமக்கல், -

நாமக்கல்லில் நேற்று சூறைக்காற்றுடன் கோடைமழை கொட்டி யது. இதையடுத்து மழைநீர் 25-க்கும் மேற்பட்ட வீடுகளுக்குள் புகுந்ததால் பொதுமக்கள் அவதி அடைந்தனர்.

<u>கோடைமழை கொட்டியது</u>

நாமக்கல் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் கடந்த சில நாட்களாக 100 டிகிரியை தாண்டி வெயில் கொளுத்தி வந்தது. இதனால் பொதுமக்கள் கடும் அவதி அடைந்து வந்தனர். இந்த நிலையில் நேற்றும் காலையில் வெயிலின் தாக்கம் அதிகமாகவே இருந்தது.

பிற்பகலுக்கு மேல் வானத்தில் கருமேகம் திரண் டன. திடீரென சூறைகாற்று டன் மழை கொட்டத் தொடங்கியது. 2¾ மணிக்கு தொடங்கிய இந்த மழை ½ மணி நேரத்துக்கும் மேலாக நீடித்தது. இதனால் சாலை களில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடுவதை காண முடிந்தது.

<u>வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்தது</u>

நாமக்கல் குட்டைத்தெரு பகுதியில் மழைநீர் குளம்போல் தேங்கியது. இந்த தண்ணீர் 25-க்கும் மேற்பட்ட வீடுகளில் புகுந்ததால் பொதுமக்கள் கடும் அவதி அடைந்தனர். அவர்கள் வீட்டுக்குள் புகுந்த தண்ணீரை பாத்திரங்களில் சேகரித்து வெளியேற்றினர். சமீபத்தில் சேந்தமங்கலம் சாலை புதியதாக போடப் பட்டது. இதனால் அப்பகுதி மேடாகி விட்டதாகவும், தண்ணீர் பள்ளமான வீடு களுக்குள் புகுந்து விடுவதா கவும், இதற்கு நகராட்சி உரிய வடிகால் வசதியை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதேபோல் கோட்டை சாலையில் உள்ள தாய்சேய் நலவிடுதி மற்றும் கணினி மையங்களிலும் தண்ணீர் புகுந்ததால் பரபரப்பு ஏற்பட்டது. சேலம் ரோடு சந்திப்பில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியதால், போக்குவரத்து சிறிது நேரம் பாதிக்கப்பட்டது.

<u>பொதுமக்கள் மகிழ்ச்சி</u>

மேலும் மழையுடன் சூறை காற்று வீசியதால், ஆங்காங்கே விளம்பர தட்டிகள் காற்றில் பறந்தன. ஒருசில இடங்களில் மரக்கிளைகளும் முறிந்து விழுந்தன. இந்த மழை கார ணமாக கடந்த சில நாட்களாக நீடித்து வந்த கடுமையான வெப்பம் சற்று தணிந்தது. இத னால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

**கரும்பு-சாமந்திப்பூ செடிகள் கருகின பயிர்களை காப்பாற்ற தண்ணீரை விலைக்கு வாங்கும் விவசாயிகள்**



காடையாம்பட்டி பகுதியில் வறட்சி காரணமாக கருகி வரும் கரும்பு பயிர்களை படத்தில் காணலாம்.

ஓமலூர்,

காடையாம்பட்டி ஒன்றியத்தில் கடும் வறட்சி நிலவுகிறது. இதனால் அங்கு பயிரிடப்பட்ட கரும்பு, சாமந்திப்பூ செடிகள் கருகி வருகின்றன. பயிர்களை காப்பாற்ற விவசாயிகள் தண்ணீரை விலைக்கு வாங்கி வருகிறார்கள்.

<u>கடும் வறட்சி</u>

சேலம் மாவட்டம் ஓமலூர் அருகே உள்ள காடையாம்பட்டி ஒன்றியம் வழியாக சேர்வராயன் மலையில் இருந்து வரும் மழைநீரை ஆதாரமாக கொண்ட மேற்கு சரபங்கா நதி செல்கிறது. மேலும், இந்த ஒன்றியத்தையொட்டி எஸ்.பாளையத்தில் இருந்து வரும் தொப்பையாறு செல்கிறது. இதன் காரணமாக இந்த ஆறுகள் செல்லும் பகுதிகளில் உள்ள விவசாய கிணறுகளின் நீர்மட்டம் உயர்ந்து காணப்படும். இதனால் அந்த பகுதி முழுவதும் விவசாயம் செழிப்பாக இருக்கும்.

ஆனால், கடந்த ஆண்டு பருவமழை பொய்த்ததால் இந்த பகுதியில் கடும் வறட்சி நிலவுகிறது. மேற்கு சரபங்கா மற்றும் தொப்பையாற்றில் தண்ணீர் வரத்து குறைந்தது. சில இடங்களில் ஆறு வறண்டு காணப்படுகிறது. இதனால் இந்த பகுதியில் உள்ள விவசாய கிணறுகளின் நீர்மட்டம் அதலபாதாளத்துக்கு சென்று விட்டது. இதன் காரணமாக காடையாம்பட்டி, சந்தைபேட்டை, சின்னேரிகாடு, கூட்டப்பட்டி, பண்ணப்பட்டி, கொங்குப்பட்டி, குண்டுக்கல் உள்ளிட்ட பகுதிகளில் விவசாயம் பாதிக்கப்பட்டு உள்ளது.

கரும்பு பயிர்கள் கருகின

மழையை நம்பி பயிர் செய்யப்பட்ட கரும்பு மற்றும் சாமந்திப்பூ செடிகள் தற்போது தண்ணீரின்றி கருகி வருகின்றன. இதனால் பயிர்களை காப்பாற்றுவதற்காக விவசாயிகள் தண்ணீரை விலைக்கு வாங்கி கிணற்றில் விட்டு பயிர்களுக்கு பாய்ச்சி வருகிறார்கள். ஆனால், ஒரு டிராக்டர் தண்ணீர் வாடகையுடன் சேர்த்து ரூ.700 முதல் ரூ.1,000 வரை விற்கப்படுகிறது. எனவே, தண்ணீருக்காக செலவிடும் தொகை அதிகரித்து வருவதால் விவசாயிகள் கவலையடைந்து உள்ளனர்.

தொடர்ந்து இதே நிலை ஏற்பட்டால் கடனில் தத்தளிக்கும் நிலை ஏற்படும் என்பதால், சில விவசாயிகள் கரும்பு மற்றும் சாமந்திப்பூ செடிகளை அப்படியே விட்டு விட்டனர். சிலர் கால்நடைகளை விட்டு மேய வைத்து வருகிறார்கள்.

**கடலூர்–பண்ருட்டி கடும் வெயிலால் முந்திரி பூக்கள் கருகியது விவசாயிகள் கவலை**

நெல்லிக்குப்பம்,

கடலூர் மற்றும் பண்ருட்டி பகுதிகளில் சுமார் 50 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் முந்திரி பயிரிடப்பட்டிருந்தது. இதில் தானே புயலின் போது பெரும்பாலான முந்திரி மரங்கள் சேதம் அடைந்தன. இதில் 30 சதவீத மரங்கள் மிஞ்சியது. முந்திரி மரங்களில் ஆண்டு தோறும் பங்குனியில் பூக்கள் பூக்கும். சித்திரை மாத கடைசியில் முந்திரி அறுவடைக்கு தயாராகும். ஆனால் இந்த ஆண்டு மாசிமாதத்திலேயே முந்திரி மரங்களில் பூக்கள் பூக்க தொடங்கியது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்திருந்தனர்.

ஆனால் அந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை. காரணம், தற்போது முந்திரி மரங்களுக்கு தேவையான தண்ணீர் இல்லாததாலும், கடும் வெயிலின் காரணமாகவும் முந்திரி பூக்கள் கருகி வருகிறது

தி இந்து
தமிழால் இணைவோம்
வெள்ளி, ஏப்ரல் 11, 2014

## உணவு தானியங்கள் சரிவர பாதுகாக்கப்படுவதில்லை: கிடங்குகள் பற்றாக்குறை - அசோசேம் அறிக்கை



இந்தியாவில் விளையும் உணவு தானியங்களில் 40 சதவீதம் சரியான விதத்தில் பாதுகாக்கப்படுவதில்லை என்று தொழில் வர்த்தக சம்மேளனங்களின் கூட்டமைப்பான அசோசேம் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

அரசுக்குச் சொந்தமான கிடங்குகளில் பாதுகாக்கப்படும் உணவு தானியங்களில் 40 சதவீதம் உரிய வகையில் பாதுகாக்கப்படவில்லை. இவற்றை பாதுகாப்பதற்கு தொழில் ரீதியிலான அணுகு முறை கடைப்பிடிக்கப்படுவதில்லை என்பது தெரியவந்துள்ளது. அரசுக் கிடங்குகள் போதுமான எண்ணிக்கையில் இல்லை. இதனால் 3.5 கோடி டன் தானியங்கள் உரிய வகையில் பாதுகாக்கப்படவில்லை என்றும் அது சுட்டிக் காட்டியுள்ளது.

நாட்டிலுள்ள உணவு தானிய சேமிப்புக் கிடங்குகளில் 70 சதவீதம் அரசு கிடங்கு களாகும். இவற்றில் 11 கோடி டன் உணவு தானியங்கள் சேமிக்கப்படுகின்றன. 12-வது ஐந்தாண்டு

திட்ட காலத்தில் கூடுததலாக 3.5 கோடி டன் தானியங்களை சேமிப்பதற்குத் தேவையான கிடங்குகள் இல்லை என்றும் அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது.

அறுவடை காலங்களில் 30 சதவீதம் முதல் 40 சதவீதம் வரையிலான உணவு தானியங்கள் உரிய வகையில் பாதுகாத்து வைக்கப்படுவதில்லை என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. சந்தையில் உணவுப் பொருள்கள் தாராளமாக கிடைப்பதற்கு உணவு தானிய பாதுகாப்பு கிடங்குகள் அதிக எண்ணிக்கையில் கட்டப்பட வேண்டும். இவை நவீன வசதியுடன் கூடியதாக இருத்தல் அவசியம் என்றும் அறிக்கை தெரிவிக்கிறது.

உரிய வகையில் உணவு தானியங்கள் பாதுகாக்கப்படாதது, சரியான வகையில் இவற்றைக் கையாளாதது உள்ளிட்ட காரணங்களால் 30 சதவீத உணவு தானியங்கள் வீணாவதாக அசோசேம் இயக்குநர் ஜெனரல் டி.எஸ். ரவாத் குறிப்பிட்டுள்ளார்.

ஒவ்வொரு உணவு தானிய மூட்டையும் அது பதப்படுத்துவதற்கு முன்பு குறைந்தபட்சம் 6 தடவையாவது திறக்கப்படுகின்றன. இது சரியான நடவடிக்கை அல்ல என்றும் குறிப்பிட்டுள்ளார்.

புதிதாக உணவு தானிய கிடங்குகள் கட்டப்படும் அதேவேளையில் ஏற்கெனவே உள்ள கிடங்குகளை பழுது பார்த்து அவற்றை நவீனமயமாக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

நாட்டிலுள்ள கிடங்குகளில் 12 சதவீதம் மட்டுமே வேளாண் விளைபொருள்களை சேமித்து வைக்கின்றன. மற்றவை தொழில்துறை சார்ந்த கிடங்குகள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கிடங்குகளின் தேவை ஆண்டுக்கு 9 சதவீத வளர்ச்சியை எட்டி வருகிறது. 2015-16-ம் ஆண்டில் இத்துறை ரூ. 35 ஆயிரம் கோடி சந்தை வாய்ப்பாக இருக்கும் என்று அசோசேம் அறிக்கை தெரிவிக்கிறது.

வேளாண் மட்டுமின்றி அனைத்துத் துறையின் வளர்ச்சிக்கு மற்றும் வர்த்தகத்துக்கு கிடங்குகள் அவசிய மானதாகும். மேலும் வேளாண் உணவு சங்கிலி பாதிக்கப்படாமல்

இருப்பதில் கிடங்குகளின் பங்கு மிக முக்கியமானது. உணவு கிடங்குகள் அதிகம் இருப்பதன் மூலம்தான் விலைவாசியைக் கட்டுக்குள் வைக்க முடியும். பொருள்களும் மக்களுக்கு இடையூறின்றி கிடைக்கும் என்றும் அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது.

போதுமான எண்ணிக்கையில் கிடங்குகள் இருந்தால்தான் அறுவடை அல்லாத பிற காலங்களில் உணவு தானியங்களை சேமித்து வைக்க முடியும் என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தனியார் நிறுவன பால் விலை உயர்வை தடுக்க நால்வர் குழு அமைக்க வேண்டும்: தமிழ்நாடு பால் முகவர்கள் கோரிக்கை

தமிழ்நாடு பால் முகவர் சங்க தலைவர் எஸ்.ஏ.பொன்னுச்சாமி வியாழக்கிழமை வெளியிட்ட அறிக்கை:

பால் முகவர்கள் நள்ளிரவில் பணியாற்றுவதால் அவர்களுக்கு தமிழக அரசு அடையாள அட்டை வழங்க வேண்டும். ஒன்றரை லட்சம் பால் முகவர்களுக்கான தனி நலவாரியம் அமைக்க வேண்டும். பால் முகவர்களுக்கு இலவச மருத்துவக் காப்பீடு வழங்க வேண்டும்.

பாலில் கலப்படம் செய்யும் பால் நிறுவனங்களை கண்டறிய தமிழக அரசு நிபுணர் குழுவை அமைத்து, கலப்படத்தை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்க வேண்டும்.

தனியார் பால் நிறுவனங்கள் பால் விலையை தன்னிச்சையாக உயர்த்துவதை தடுக்க பொதுமக்கள், பால் முகவர்கள், அரசு அதிகாரிகள், தனியார் பால் நிறுவன அதிகாரிகள் அடங்கிய நால்வர் குழுவை அமைக்க வேண்டும். பால் வணிகத்தில் நேரடி அன்னிய முதலீடு செய்யும் முயற்சியை அரசு தடுத்து நிறுத்த தமிழகத்தில் உள்ள அனைத்து பால் நிறுவனங்களையும் ஒருங்கி ணைத்து போராட முடிவு செய்யப் பட்டுள்ளது. அடுத்த கட்டமாக, இந்தியாவில் உள்ள அனைத்து பால் நிறுவனங்களையும் ஒருங் கிணைத்து மிகப் பெரிய அளவில் போராட்டம் நடத்தவும், நடந்து முடிந்த மாநாட்டில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது. இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.